www.Padasalai.Net www.CBSEtips.in

V11Acc

விருதுநகர் மாவட்டம்

காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

வகுப்பு 11

நேரம்: 3.00 மணி **கணக்குப்பதிவியல்** மதிப்பெண்கள்: 90

பகுதி - I

20×1=20

குறிப்பு: **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக.

1) நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
அ) சமூகக் கணக்கியல் ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
இ) மேலாண்மைக் கணக்கியல் ஈ) பொறுப்பு கணக்கியல்

2) நிதித் தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
அ) கடனீந்தோர் ஆ) பணியாளர் இ) வாடிக்கையாளர் ஈ) அரசு

3) வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது
அ) வணிக தனித்தன்மை கருத்து ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து
இ) கணக்கியல் கால அனுமானம் ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை

4) இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
அ) இந்திய மையவங்கி ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
இ) உச்சநீதிமன்றம் ஈ) இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம்

5) கணக்கியல் சமன்பாடு, எந்த கணக்கியல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது?
அ) இரட்டைத் தன்மை ஆ) நிலைத்தன்மை இ) நிறுவனத் தொடர்ச்சி ஈ) நிகழ்வுத் தன்மை

6) உரிமையாளரால், வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை பற்று வைக்கப்படும் கணக்கு
அ) எடுப்புகள் கணக்கு ஆ) ரொக்க கணக்கு இ) முதல் கணக்கு ஈ) கொள்முதல் கணக்கு

7) பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம்.
அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல் இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக் கட்டுதல்

8) ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு
இ) இருப்பு இன்மை ஈ) பற்று மற்றும் வரவு இருப்பு

9) கீழ்கண்ட கணக்குகளில் எந்தக் கணக்கின் இருப்பு இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் தோன்றும்?
அ) பற்பல கடனீந்தோர் க/கு ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு
இ) எடுப்புகள் க/கு ஈ) முதல் க/கு

10) இருப்பாய்வில் பற்றுப்பத்தியின் மொத்தமும் வரவுப்பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு
அ) வியாபார க/கு ஆ) வேறுபாட்டு க/கு இ) அனாமத்து க/கு ஈ) இதர கணக்கு

11) ஒரு குறிப்பிட்ட கால கொள்முதல் ஏட்டின் மொத்தம் எடுத்தெழுதப்படுவது
அ) கொள்முதல் கணக்கின் பற்றுப்பக்கம் ஆ) விற்பனை கணக்கின் பற்றுப்பக்கம்
இ) கொள்முதல் கணக்கின் வரவுப்பக்கம் ஈ) விற்பனை கணக்கின் வரவுப்பக்கம்

12) பின்வரும் வாக்கியங்களில் எது உண்மையல்ல?
அ) ரொக்கத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது.
ஆ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது உரிய குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகிறது.
இ) வியாபாரத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது.
ஈ) மாற்றுச்சீட்டின் செலுத்தற்குரிய நாளை கணக்கிடும்போது மூன்று நாட்கள் சலுகை நாட்களாகக் கூட்டப்படுகின்றன.

13) பொருந்தாத இணையை அடையாளம் காண்க.
அ) சரக்கு விற்பனை - ரொக்க நடவடிக்கை
ஆ) லதாவிடமிருந்து சரக்கு வாங்கியது - கடன் நடவடிக்கை
இ) சம்பளம் காசோலை மூலம் செலுத்தியது - வங்கி நடவடிக்கை
ஈ) இராம் தொழில் தொடங்கியது - கடன் நடவடிக்கை

14) கீழ்கண்டவற்றில் எது எதிர்பதிவாக பதிவு செய்யப்படும்?
அ) சொந்த செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
ஆ) அலுவலக செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
இ) வாடிக்கையாளர் நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்திய தொகை
ஈ) வங்கி எடுத்துக்கொண்ட வட்டி

15) எந்தச் செலவிற்கு சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்?
அ) தபால் & பயணச் செலவுகள் ஆ) மேலாளரின் ஊதியம்
இ) அறைகலன் & பொருத்துகைகள் வாங்க ஈ) மூலப்பொருட்கள் வாங்க

16) சிறிய செலவினங்களைப் பதியும் ஏடு
அ) ரொக்க ஏடு ஆ) கொள்முதல் ஏடு
இ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டேடு ஈ) சில்லறை ரொக்க ஏடு

17) **பொருத்துக:**

	நிரல் I		**நிரல் II**
1.	முதல்	-	பெயரளவு க/கு
2	கொடுபட வேண்டிய கூலி	-	சொத்து க/கு
3.	பெற்ற தள்ளுபடி	-	பிரதிநிதித்துவ ஆள்சார் க/கு
4.	[illegible]	-	[illegible] க/கு

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

	1	2	3	4		1	2	3	4
அ)	iii	ii	i	iv	ஆ)	ii	iii	iv	i
இ)	iv	iii	i	ii	ஈ)	i	iv	iii	ii

18) வங்கி சரிக்கட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது
அ) வங்கி அறிக்கை ஆ) ரொக்க ஏடு
இ) வங்கி அறிக்கை & ரொக்க ஏட்டின் வங்கி பத்தி ஈ) சில்லறை ரொக்க ஏடு

19) சாதாரண ரொக்க ஏட்டை வைத்திருக்கும் ஒரு நிறுவனம் பேரேட்டில் .... தயாரிக்க தேவை இல்லை.
அ) முதல் க/கு ஆ) விற்பனை க/கு இ) ரொக்க க/கு ஈ) கொள்முதல் க/கு

20) GAAP என்பது
அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்
இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
ஈ) இவற்றில் ஏதுமில்லை

பகுதி - II

குறிப்பு: ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×2=14
வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

21) கணக்கியலை வரையறுக்கவும்.

22) பின்வருவனவற்றிற்கான ஏதேனும் ஒரு நடவடிக்கையைத் தருக.
அ) சொத்துகள் குறைதல் மற்றும் பொறுப்புகள் குறைதல்
ஆ) ஒரு சொத்து அதிகரித்தல் மற்றும் மற்றொரு சொத்து குறைதல்

23) பின்வரும் குறிப்பேட்டுப் பதிவில் விடுபட்ட தகவல்களை நிரப்புக.

நாள்	விவரம்	பே.ப.எ	பற்று (₹)	வரவு (₹)
	.... (ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது ₹ 2,00,000)		....	....

24) எடுத்தெழுதுதல் என்றால் என்ன?

25) பின்வருவனவற்றை ஆள்சார் க/கு, சொத்து க/கு மற்றும் பெயரளவு க/கு என வகைப்படுத்துக.
(அ) முதல் (ஆ) கட்டடம் (இ) வங்கி (ஈ) உள் ஏற்றிச்செல் செலவு

26) இருப்பாய்வின் படிவம் தருக.

27) உரிய குறிப்பேடு என்றால் என்ன?

28) ஏதேனும் நான்கு துணையேடுகளின் வகைகளைக் குறிப்பிடுக.

29) பின்வரும் நடவடிக்கைகளை குணால் என்பவரின் தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

			₹
2017 ஜனவரி	1	கையிருப்பு ரொக்கம்	1,12,000
	10	இரமேஷ் என்பவரிடமிருந்து பெற்றது	30,000
	15	ரொக்கத்திற்கு சரக்கு விற்றது	25,000
	20	அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது	50,000
	30	வாடகை செலுத்தியது	8,000

30) சிறுகுறிப்பு வரைக - மாற்றுச்சீட்டில் மேலெழுதுதல்

பகுதி - III

குறிப்பு: ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×3=21
வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

31) கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக.

32) பேரேட்டின் பயன்கள் ஏதேனும் மூன்றினை விவரி.

33) பின்வரும் நடவடிக்கைகளை குறிப்பேட்டில் பதிந்து பேரேட்டில் எடுத்தெழுதவும்.

			₹
2022 ஜனவரி	1	ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது	1,00,000
	5	வங்கியில் செலுத்தியது	50,000
	6	இராமிடமிருந்து சரக்குகள் ரொக்கத்திற்கு வாங்கியது	10,000

34) இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

35) பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.

கணக்கின் பெயர்	₹	கணக்கின் பெயர்	₹
வங்கி கடன்	2,00,000	கொள்முதல்	1,80,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	1,00,000	விற்பனை	3,00,000
சரக்கிருப்பு	70,000	கடனாளிகள்	4,00,000
முதல்	2,50,000	வங்கி	2,00,000

36) பின்வரும் நடவடிக்கைகளை எந்த துணையேட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடுக.
i) ரொக்கத்திற்கு சரக்கு விற்றது.
ii) கடனுக்கு சரக்கு விற்றது.
iii) கடனுக்கு சரக்கு வாங்கியது.
iv) உரிமையாளர் சரக்குகளை தனது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்தது.
v) சரக்கு அளித்தோருக்கு உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு.
vi) கடனுக்கு சொத்துகள் வாங்கியது.

37) எதிர்ப்பதிவை உதாரணத்துடன் விளக்குக.

38) வங்கிமேல்வரைப்பற்று என்றால் என்ன?

39) சிறுகுறிப்பு வரைக: (i) இடாப்பு (ii) பற்றுக்குறிப்பு

40) "இருப்பாய்வு என்பது கணக்கேடுகளில் உள்ள கணக்கீட்டின் சரித்தன்மை அறிய உதவும் தொடக்கநிலை சான்றாவணம் மட்டுமே" என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? காரணம் கூறவும்.

www.Padasalai.Net www.CBSEtips.in

V11Acc

பகுதி - IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7×5=35

41) அ) ஜெயசீலி என்னும் தனிவணிகர் ஒரு பலசரக்கு கடையினை நடத்தி வருகிறார். 2018 ஜனவரியில் அக்கடையின் நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன. அவைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

			₹
2018 ஜனவரி	1	ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது	80,000
	2	வங்கியில் செலுத்திய ரொக்கம்	40,000
	3	ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது	5,000
	4	லிப்டன் நிறுவனத்திடமிருந்து சரக்குகளை கடனுக்கு கொள்முதல் செய்தது	10,000
	5	ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது	11,000
	6	சம்பளத்தை ரொக்கமாக வழங்கியது	5,000
	7	லிப்டன் நிறுவனத்திடம் ஜனவரி 4 அன்று கொள்முதல் செய்ததற்கான தொகை காசோலை மூலம் செலுத்தப்பட்டது.	
	8	ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது	4,000
	9	மின்கட்டணம் ரொக்கமாக செலுத்தப்பட்டது	1,000
	10	நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய காப்பீட்டுமுனைமம்	300

(அல்லது)

ஆ) 2018 மார்ச் 31 ஆம் நாளுக்குரிய வங்கி சரிக்கட்டும் பட்டியலைத் தயார் செய்து ரொக்க ஏட்டின் படியான இருப்பினைக் கண்டறிக.

விவரம்

		₹
i)	வங்கி அறிக்கையின்படியான வங்கி இருப்பு	15,000
ii)	விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது	2,500
iii)	வங்கி கட்டணம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை	250
iv)	வங்கியால் பற்று செய்யப்பட்ட வட்டி ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை	300
v)	நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய காப்பீட்டுமுனைமம் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை	100
vi)	செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது	300

42) அ) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாக பேரேட்டில் பதிந்து எடுத்து எழுதவும்.

			₹
2017 ஜுன்	1	ராஜா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது	5,00,000
	6	ரொக்கத்திற்கு சரக்கு விற்றது	80,000
	8	தேவி என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது	90,000
	15	ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது	40,000
	20	சாந்தி என்பவரிடம் கடனாக சரக்கு வாங்கியது	50,000

(அல்லது)

ஆ) ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

43) அ) பாபு என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்காணும் இருப்புகளைக் கொண்டு 31.3.2023 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயாரிக்கவும்.

	₹		₹
கைரொக்கம்	7,000	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	7,000
பற்பல கடனாளிகள்	5,400	பற்பல கடனீந்தோர்	11,800
சம்பளம்	6,800	முதல்	25,000
வராக்கடன்	200	கொள்முதல்	45,000
தொடக்கச் சரக்கிருப்பு	15,400	விற்பனை	50,000

(அல்லது)

ஆ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு துரைராஜ் என்பவரின் முப்பத்தி ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

			₹
2017 மார்ச்	1	ரொக்க இருப்பு	12,000
		வங்கி இருப்பு	15,000
	2	ரொக்கம் வங்கியில் செலுத்தியது	11,000
	3	சரக்கு விற்றது ₹18,500. பாதி ரொக்கமாகவும், பாதி காசோலையாகவும் பெறப்பட்டு, அக்காசோலை உடனடியாக வங்கியில் செலுத்தப்பட்டது.	
	4	ஜெயராஜ் என்பவருக்கு கடனுக்கு விற்றது	7,000
	8	ஜெயராஜ் காசோலை அனுப்பி தனது கணக்கு முழுவதையும் தீர்த்துக் கொண்டது	6,900
	12	ஜெயராஜிடம் பெற்ற காசோலை வங்கியில் செலுத்தப்பட்டது.	
	14	இக்பால் என்பவரிடமிருந்து சரக்குகள் வாங்கி அவருக்கு உடனடியாக காசோலை விடுக்கப்பட்டது	8,500
	15	முரளி என்பவரிடமிருந்து சரக்குகள் கடனுக்கு வாங்கப்பட்டது	4,000
	19	கண்ணப்பனிடமிருந்து ₹1,975க்கான காசோலை பெற்றுக்கொண்டு ₹2,000க்கான கணக்கு முழுவதும் தீர்க்கப்பட்டது.	
	20	சொந்த செலவுகளுக்காக ரொக்கம் எடுத்தது	3,000
		காசோலை மூலம் எடுத்தது	5,000
	25	வினோத்திற்கு ₹1,850க்கு காசோலை விடுத்து தீர்த்துக் கொண்ட கணக்கு	2,000

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

44) அ) கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம்பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம்பெறுமா எனக் காட்டுக.

(i) வெளிதூக்குக் கூலி (ii) விற்பனை (iii) கொள்முதல் (iv) வராக்கடன்
(v) வட்டி செலுத்தியது (vi) தள்ளுபடி பெற்றது (vii) முதல்
(viii) எடுப்புகள் (ix) கொள்முதல் திருப்பம் (x) உள்தூக்கு கூலி

(அல்லது)

ஆ) ஆனந்த் என்பவரின் கீழ்கண்ட நடவடிக்கைகளை ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதிவு செய்யவும்.

			₹
2019 டிசம்பர்	1	கைவச ரொக்கம்	19,500
	4	ரொக்கத்திற்கு சரக்கு விற்றது	32,000
	5	காந்தியிடம் கடனுக்கு கொள்முதல் செய்தது	20,000
	9	கோபுவிடம் பெற்றது	11,800
		அவருக்கு அளித்த தள்ளுபடி	200
	15	மின்கட்டணம் ரொக்கமாகச் செலுத்தியது	12,500
	17	ரொக்கம் செலுத்தி கணிப்பொறி வாங்கியது	16,800
	25	காந்திக்கு ₹19,700 செலுத்தி அவர் கணக்கு முழுவதையும் தீர்த்துக் கொண்டது.	
	28	திருவேங்கடத்திடம் ரொக்கம் பெற்றது	8,900
		அவருக்கு அளித்த தள்ளுபடி	100
	30	வியாபாரச் செலவுகளை ரொக்கமாகச் செலுத்தியது	3,500

45) அ) பின்வரும் நடவடிக்கைகளை பொன்னியின் விற்பனை ஏடு மற்றும் விற்பனைத் திருப்ப ஏட்டில் பதிவு செய்து பேரேட்டில் எடுத்தெழுதவும்.

2017 அக்.
1 இடாப்பு எண் 68ன் படி, செந்திலுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹20,500
4 இடாப்பு எண் 74ன் படி, மாதவனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹12,800
7 இடாப்பு எண் 78ன் படி, கனகசபைக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹7,500
15 வரவுக்குறிப்பு 7ன்படி, செந்தில் திருப்பிய சரக்கு மதிப்பு ₹1,500க்கு ரொக்கம் அளிக்கப்படவில்லை.
20 செல்வத்திடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ₹13,300.
25 வரவுக்குறிப்பு 11ன்படி, மாதவன் திருப்பிய சரக்கு ₹1,800க்கு ரொக்கம் செலுத்தப்படவில்லை.

(அல்லது)

ஆ) ரொக்க ஏட்டின் வங்கிப்பத்திக்கும், வங்கி அறிக்கைக்குமுள்ள வேறுபாடுகள் யாவை?

46) அ) குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

2019 மார்ச்
1 ராம் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹3,00,000
2 வங்கியில் பணம் செலுத்தியது ₹2,00,000
3 ஜெயா அறைகலன் விற்பனையகத்திடமிருந்து ₹23,000 மதிப்புள்ள அறைகலன் கடனுக்கு வாங்கப்பட்டது.
4 அந்தோணியிடமிருந்து ₹5,000 மதிப்புள்ள சரக்குகள் எடுப்பு அட்டை மூலம் பணம் செலுத்தி வாங்கப்பட்டது.
5 சியாம் என்பவரிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹50,000.
6 ஜெயா அறைகலன் விற்பனையகத்திற்கு பணம் செலுத்தப்பட்டது.
10 உரிமையாளரின் மின்கட்டணம் செலுத்தியது ₹2,000
12 மனோ என்பவருக்கு சரக்கு கடனுக்கு விற்றது ₹20,000
18 மனோவால் திருப்பி அனுப்பப்பட்ட சரக்கு ₹5,000.

(அல்லது)

ஆ) பின்வரும் வணிக நடவடிக்கைகளின் விளைவுகளை கணக்கியல் சமன்பாட்டில் காண்பிக்கவும்.

i) அன்பு ரொக்கம் ₹20,000, சரக்குகள் ₹12,000 மற்றும் இயந்திரம் ₹8,000த்துடன் தொழில் தொடங்கினார்.
ii) ரமணியிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹7,000.
iii) ரமணிக்கு ₹6,900 கொடுத்து அவரது கணக்கு முழுவதும் தீர்க்கப்பட்டது.
iv) ₹5,400 மதிப்புள்ள சரக்குகள் கடனுக்கு இராஜனுக்கு விற்கப்பட்டது ₹6,000.
v) இராஜனிடமிருந்து ₹5,800 பெற்றுக்கொண்டு அவரது கணக்கு முடிக்கப்பட்டது.

47) அ) கணக்கு என்றால் என்ன? கணக்குகளை வகைப்படுத்தி தகுந்த உதாரணங்களுடன் கூறுக.

(அல்லது)

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து முன்பண மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

			₹
2023 ஜனவரி	1	சில்லறை செலவுகளுக்காக ரொக்கம் பெற்றது	500
	2	பயணச் செலவுக்கு கொடுத்தது	5
		வண்டிக் கட்டணம் கொடுத்தது	12
	3	தபால் செலவு செய்தது	15
		தற்காலிக வேலையாட்களுக்கு கூலி கொடுத்தது	66
	4	எழுதுபொருள் வாங்கியது	134
		போக்குவரத்துச் செலவுகள் கொடுத்தது	18
	5	பழுதுபார்ப்புச் செலவு செய்தது	65
		பேருந்துக்கட்டணம் செலுத்தியது	11
		வண்டிக் கட்டணம் கொடுத்தது	24

Kindly send me your study materials to padasalai.net@gmail.com